Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 206 | உள்ளூர் - 25.07.2026 | சனிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 206 | வெளியூர் - 26.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

ஜாதக பலன் துல்லியமாக வேண்டுமா?

யூனியன் வங்கி ஆஃப் இந்தியா: 395 காலியிடங்கள்!

தலைமைச் செயலகம் புதிய முகவரி?

சேனல்களின் "டி.ஆர்.பி"- மத்திய அரசின் அதிரடி!

## தேர்வு முறைகேட்டில் ஈடுபட்டால் 10 ஆண்டுகள் சிறை, ரூ.10 கோடி அபராதம்?



புதுடெல்லி, ஜூலை. 25–

பொதுத் தேர்வுகளில் முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கான தண்டனை குறித்த சட்ட திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இளநிலை நீட் தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய நிலையில், பல்வேறு தரப்பினரும் நாடுதழுவிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே, பொதுத் தேர்வுகள் (முறைகேடு தடுப்பு)சட்டம் 24–இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட மசோதாவுக்கு, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வெள்ளிக்கிழமையில் (ஜூலை 24) அளிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, தேர்வு முறைகேடுகளில் தனிநபர்களுக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டு வந்தது.

ஆனால், தற்போதைய சட்ட திருத்த மசோதாவின்படி, தேர்வு முறைகேடுகளில் ஈடுபவர்களுக்கு குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ. 10 கோடி அபராதமும் விதிக்க வழிசெய்கிறது.

இந்த சட்ட திருத்த மசோதா, வரும் திங்கள்கிழமையில் (ஜூலை 27) நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்ய வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரின் கோரிக்கை குறித்து மத்திய அரசு இன்று முடிவெடுக்கவுள்ளது.

## இன்ஸ்டாவில் ஒரே இரவில் 10 லட்சம் பேர்... இளைஞர்களுக்கு பிரதமர் மோடி நன்றி!



புதுடெல்லி, ஜூலை. 25–

நீட் வினாத்தாள் கசிவு குறித்து வெளியிடப்பட்ட வீடியோவை வரவேற்ற இளைஞர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றுகூறி, இன்ஸ்டாகிராமில் பிரதமர் மோடி வீடியோ வியாழக்கிழமை (ஜூலை 23) வெளியிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து, தான் வெளியிட்ட வீடியோவுக்கு பலரும் வரவேற்பளித்ததற்கு நன்றிகூறி, மீண்டும் வெள்ளிக்கிழமை இரவில் (ஜூலை 24) வீடியோ வெளியிட்டுள்ளார்.

பிரதமர் மோடி வியாழக்கிழமை வெளியிட்ட வீடியோவுக்கான வரவேற்பு குறித்து பேசியிருப்பதாவது, நன்றி, நண்பர்களே. நேற்றிரவு உங்களுடன் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் பதிவிட்ட காணொலிக்கு நீங்கள் அளித்த வரவேற்புக்கும், உங்களின் ஆலோசனைகளுக்கும் நன்றி. உங்களின் அன்பும் ஆதரவும் தொடரும் என்றும், நமது பிணைப்பு மேலும் வலுவாகும் என்றும் நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இளைஞர்கள் பெரும்பாலானோர் இன்ஸ்டாகிராமில் சுறுசுறுப்பாக இருப்பதால், மத்திய அமைச்சர்களும் இன்ஸ்டாகிராமில் இணையுமாறு பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே, வெள்ளிக்கிழமை இரவில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வீடியோவுக்கு ஒரே இரவில் 10.4 கோடி பார்வைகள், 70.4 லட்சம் லைக்குகள் மட்டுமின்றி, ஒரே இரவில் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை 10 லட்சம் பேர் அதிகரித்துள்ளனர். அதேபோல, வியாழக்கிழமை வெளியிட்ட வீடியோ 33.3 கோடி பார்வைகள் பெற்றுள்ளது.

## 10 ஆண்டுகளில் இல்லாத வேகம்...

# தங்கம் குவிக்கும் உலக நாடுகள்!

## போர் பதற்றம், பணவீக்கம், டாலர் மீதான நம்பிக்கை குறைவு

## மத்திய வங்கிகளின் புதிய யுக்தி!!




சென்னை, ஜூலை. 25–

உலக நாடுகளின் மத்திய வங்கிகள் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தங்கத்தை வாங்கி குவித்து வருவதாக வேர்ல்ட் கோல்ட் கவுன்சில் (World Gold Council) வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது. போர் பதற்றம், பணவீக்கம், நாணய மதிப்பு சரிவு மற்றும் உலகளாவிய அரசியல் நிச்சயமற்ற சூழல் ஆகியவை இதற்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

அறிக்கையின்படி, கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 1,000 டன்னுக்கும் அதிகமான தங்கத்தை உலக மத்திய வங்கிகள் வாங்கியுள்ளன. இது கடந்த 10 ஆண்டுகளின் சராசரியை விட இரு மடங்கு அதிகமாகும். மேலும், 89 சதவீத மத்திய வங்கிகள் வரும் ஆண்டுகளிலும் தங்கக் கையிருப்பை அதிகரிக்க திட்டமிட்டுள்ளன. இதில் சில நாடுகள் தங்களது தங்க இருப்பை 45 சதவீதம் வரை உயர்த்த திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அமெரிக்க டாலர், வெளிநாட்டு பத்திரங்கள் மற்றும் பிற நாணயங்களில் அதிக முதலீடு செய்த மத்திய வங்கிகள், தற்போது பாதுகாப்பான சொத்தாக கருதப்படும் தங்கத்தின் மீது கவனம் செலுத்தி வருகின்றன. பணவீக்கம் அதிகரிக்கும் காலங்களில் தங்கத்தின் மதிப்பு நிலைத்திருப்பதும், அதன் திரவத்தன்மை (Liquidity) அதிகமாக இருப்பதும் இதற்கு முக்கிய காரணமாகும். மேலும், வெளிநாட்டு வங்கிகளில் பாதுகாக்கப்பட்டிருந்த தங்களது தங்கக் கையிருப்பையும் பல நாடுகள் தங்கள் நாட்டுக்கே திரும்பக் கொண்டு வரத் தொடங்கியுள்ளன. இந்த போக்கு தொடர்ந்தால், உலக பொருளாதாரத்தில் அமெரிக்க டாலரின் ஆதிக்கம் படிப்படியாக குறைந்து, தங்கத்தின் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கும் என பொருளாதார நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

## முன்னாள் மனைவிக்கு ரூ.6,200 கோடி இழப்பீடு- தென்கொரிய தொழிலதிபருக்கு சியோல் ஐகோர்ட் அதிரடி உத்தரவு!





தென்கொரியா, ஜூலை. 25–

தென் கொரிய நாட்டின் 2–வது மிகப்பெரிய நிறுவனமான 'எஸ்கே குரூப்' அதிபர் சே டே–வோன். இவருக்கும், அந்த நாட்டின் முன்னாள் அதிபரின் மகள் ரோ சோ–இயோங்கிற்கும் இடையே குடும்பத் தகராறு காரணமாக விவாகரத்து வழக்கு நடந்து வந்தது.

இந்த பரபரப்பான வழக்கில் சியோல் ஐகோர்ட்டு அதிரடி தீர்ப்பு வழங்கியது. அதன்படி, தொழிலதிபர் சே டே–வோன் தனது முன்னாள் மனைவிக்கு விவாகரத்து இழப்பீடாக ரூ.6 ஆயிரத்து 200 கோடியை (944 பில்லியன் வான்) கொடுக்க வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

நிறுவனத்தின் பங்குகளை விற்காமல், இந்த முழு தொகையையும் ரொக்கமாகவே கொடுக்க வேண்டும் என்றும் கோர்ட்டு கூறியுள்ளது. தென் கொரிய வரலாற்றிலேயே விவாகரத்து வழக்கில் ஒருவருக்கு இவ்வளவு பெரிய தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது இதுவே முதல்முறையாகும்.

## கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகுவாரா? மத்திய அரசு முக்கிய முடிவு!



புதுடெல்லி, ஜூலை. 25–

மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரின் கோரிக்கை குறித்து மத்திய அரசு இன்று முடிவெடுக்கவுள்ளது.

நீட் இளநிலைத் தேர்வு வினாத்தாள் கசிந்த விவகாரம் குறித்து மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் எனக் கோரி, கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் ஜூன் 20 ஆம் தேதியில் தில்லியின் ஜந்தர் மந்தர் பகுதியில் போராட்டம் நடத்தத் தொடங்கினர். ஒரு மாதத்துக்கும் மேலாக நடக்கும் இப்போராட்டத்தில் மாணவர்கள், இளைஞர்கள், அரசியல் தலைவர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, போராட்டத்தைக் கைவிடக் கோரி மத்திய தொடர்ந்து வலியுறுத்திய நிலையில், மாணவர்கள் கலையச் சொல்லி தடியடியும் நடத்தினர். மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனிடையே, போராட்டம் நடத்தி வரும் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினருடன் மத்திய அமைச்சர்கள் ஜெ.பி. நட்டாவும் ஜிதேந்திர சிங்கும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இரண்டாவது முறையாக வெள்ளிக்கிழமை நடந்த பேச்சுவார்த்தையின்போது, கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகல் குறித்தே கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் தொடர்ந்து வலியுறுத்தினர்.

இதனையடுத்து, அவர்களின் கோரிக்கை மீது முடிவெடுக்க மத்திய அமைச்சர்கள் அவகாசம் கோரியதுடன், தர்மேந்திர பிரதானின் ராஜிநாமா குறித்து இன்று (ஜூலை 25) நண்பகலுக்குள் முடிவெடுப்பதாகவும் மத்திய அமைச்சர்கள் கூறினர்.

## "இன்று முதல் அரசியல் துறவறம்"- ராமதாஸ்!



சென்னை, ஜூலை. 25–

பாமக நிறுவனர் ராமதாஸ் இன்று தனது 88–வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு பல்வேறு அரசியல் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். ராமதாசின் பிறந்தநாளையொட்டி, பாமக தலைவரும், ராமதாசின் மகனுமான அன்புமணி ராமதாஸ், திண்டிவனத்தில் உள்ள தைலப்புரம் தோட்டத்துக்கு வருகை தந்து தந்தையைசந்தித்து ஆசி பெற்றார். இதன் பின்னர் அன்புமணி ராமதாசுடன் சேர்ந்து ராமதாஸ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, அரசியலில் இருந்து விலகுவதாக ராமதாஸ் அதிரடியாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசியது பின்வருமாறு;

"எனது 88வது வயதில் அரசியல் துறவறம் மேற்கொள்கிறேன். அரசியல் துறவறம் என்று சொன்னால், அரசியல் பேச மாட்டேன். அரசியலில் தலையிட மாட்டேன். இனி அரசியலை அன்புமணி பார்த்துக் கொள்வார். அனைவரையும் பார்ப்பேன். என்னிடம் வருபவர்களை நலம் விசாரிப்பேன். அரசியல் பேச வேண்டாம். தலை சுற்றல் இருந்ததால் தனியார் மருத்துவமனையில் 20 நாட்கள் அனுமதிக்கப்பட்டு இருந்தேன். என்னை இனி தொந்தரவு செய்ய வேண்டாம்."

## சேனல்களின் "டி.ஆர்.பி"- மத்திய அரசின் அதிரடி!




புதுடெல்லி, ஜூலை. 25–

இந்தியாவில் தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் சீரியல்களின் பார்வையாளர் எண்ணிக்கையை அளவிடும் டி.ஆர்.பி (TRP) மதிப்பீட்டை வெளியிட்டு வரும் பார்க் (BARC) அமைப்பின் செயல்பாட்டில் மாற்றம் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

'தொலைக்காட்சி மதிப்பீட்டுக் கொள்கை2026' மூலம், ஒரே அமைப்பின் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வந்து, புதிய மதிப்பீட்டு நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பாக சில மாநிலங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், இறுதி முடிவு வரும் வரை வாரந்தோறும் வெளியாகி வந்த டி.ஆர்.பி ரேட்டிங் பட்டியலை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு BARC–க்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனால், தொலைக்காட்சி சேனல்களின் ரேட்டிங், விளம்பர வருவாய் மற்றும் போட்டி நிலை ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 25.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 09-ம் தேதி

## ரஷ்யா தள்ளுபடிக்கு ‘கட்’... இந்தியாவுக்கு புதிய எரிபொருள் சவால்!




ஈரான்அமெரிக்கா போர் தீவிரமடைந்துள்ள நிலையில், இந்தியாவுக்கு தள்ளுபடி விலையில் கச்சா எண்ணெய் வழங்கி வந்த ரஷ்யா, செப்டம்பர் மாத டெலிவரிக்கான தள்ளுபடியை ரத்து செய்துள்ளது. இதனால் இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி செலவு உயரக்கூடிய சூழல் உருவாகியுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக மேற்கத்திய நாடுகளின் தடைகளால் ரஷ்யா மலிவு விலையில் கச்சா எண்ணெய் வழங்கியது. அந்த சலுகையால் இந்தியா கோடிக்கணக்கான டாலர்களை சேமித்ததோடு, பெட்ரோல்டீசல் விலையையும் ஓரளவு கட்டுக்குள் வைத்திருக்க முடிந்தது. ஆனால் தற்போது ஹார்முஸ் நீரிணை பதற்றம், உலகளாவிய கச்சா எண்ணெய் விநியோக சிக்கல் மற்றும் அதிகரித்த தேவை காரணமாக ரஷ்யா தள்ளுபடியை நிறுத்தியுள்ளது.

இதன் தாக்கமாக இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்களின் செலவு உயரும், லாபம் குறையும், எதிர்காலத்தில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு உள்ளிட்ட எரிபொருட்களின் விலை உயர்வு ஏற்படும் அபாயம் உள்ளது. இதனுடன் போக்குவரத்து கட்டணம், அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் பணவீக்கமும் அதிகரிக்கக்கூடும்.

இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் விலை நிலைத்தன்மையை காக்க, மாற்று நாடுகளுடன் நீண்டகால கச்சா எண்ணெய் ஒப்பந்தங்களை வலுப்படுத்துவதும், உள்நாட்டு எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துவதும் தற்போதைய அவசியமாகியுள்ளது.

## பழனி மட நில வழக்கு: சிபிஐ விசாரணை கோரிய டாக்டர் கிருஷ்ணசாமி

பழனி, ஜூலை 25–

புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, பழனியில் முறைகேடாக பதிவு செய்யப்பட்டதாக கூறப்படும் தண்டபாணி சுவாமி மட நிலத்தை நேரில் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மட நில விற்பனையில் பல மர்மங்கள் இருப்பதாகவும், சிபிசிஐடி அல்ல சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், இந்த விவகாரத்தில் முதல்வர் விஜய் விளக்கம் அளிக்க வேண்டும், நீட் தேர்வை மத்திய சுகாதாரத் துறையே நடத்த வேண்டும், தமிழகத்திற்கு காவிரி நீரைப் பெற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் விஜயகுமார் உள்ளிட்ட கட்சியினர் பங்கேற்றனர்.

## டெல்லி பதற்றம்... அமித்ஷா தமிழ்நாடு பயணம் ரத்து!




புதுடெல்லி, ஜூலை. 25–

டெல்லியில் நீட் தேர்வுக்கு எதிராக மாணவர்கள், இளைஞர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் தமிழ்நாடுபுதுச்சேரி 2 நாள் பயணம் திடீரென ரத்து செய்யப்பட்டது. இதனால் சென்னை விமான நிலையத்தில் திட்டமிடப்பட்டிருந்த பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டமும் ரத்து செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


## கோவிலுக்கு திரும்புகிறார் பூரி ஜெகநாதர்... ‘பஹுடா யாத்திரை’ கோலாகலம்!



புதுடெல்லி, ஜூலை 25–

உலகப் புகழ்பெற்ற பூரி ஜெகநாதர் ரத யாத்திரையின் நிறைவு நிகழ்வான ‘பஹுடா யாத்திரை’ வெள்ளிக்கிழமை மாலை கோலாகலமாக தொடங்கியது. குண்டிச்சா கோவிலில் ஒரு வாரம் தங்கியிருந்த ஜெகநாதர், பாலபத்திரர், சுபத்திரை ஆகியோர் மீண்டும் ஜெகநாதர் கோவிலுக்குத் திரும்பும் புனிதப் பயணத்தில், “ஜெய் ஜெகந்நாத்”, “ஹரிபோல்” முழக்கத்துடன் லட்சக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். விழாவையொட்டி 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள துடன், கூட்டத்தை கண்காணிக்க AI தொழில்நுட்பத்துடன் 400–க்கும் மேற்பட்ட சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

## ₹14,257 கோடி முதலீடு... ஏஐ போட்டியில் TCS-க்கு சவால் விடும் HCL




புதுடெல்லி, ஜூலை. 25–

இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏஐ மற்றும் டேட்டா சென்டர் முதலீடுகள் வேகமெடுத்து வருகின்றன. TCS–ஐ தொடர்ந்து, HCLTech நிறுவனமும் ₹14,257 கோடி முதலீட்டில் ஒடிசாவில் மிகப்பெரிய ஏஐ டேட்டா சென்டர்அமைக்கிறது. இதற்காக ஒடிசா அரசு மற்றும் உள்நாட்டு ஏஐ நிறுவனமான Sarvam AI உடன் HCLTech புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த மையம் மூலம் முழுமையான AI (Full–Stack AI) சேவைகள், பல மொழி ஏஐ மாதிரிகள் மற்றும் அரசு, தனியார் நிறுவனங்களுக்கு துறைவாரியான ஏஐ தீர்வுகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முதலீடு, இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டேட்டா சென்டர் மற்றும் செயற்கை நுண்ணறிவு சந்தையில் HCLTech–ன் நிலையை வலுப்படுத்துவதோடு, TCS உள்ளிட்ட முன்னணி ஐடி நிறுவனங்களுக்கு புதிய போட்டியை உருவாக்கும் என தொழில்துறை வட்டாரங்கள் கருதுகின்றன.

## நீட் தேர்வை கண்டித்து தமுமுக மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம்!




ஈரோடு, ஜூலை. 25–

டெல்லி ஜந்தர் மந்தரில் நீட் தேர்வுக்கு எதிராக நடைபெறும் போராட்டத்தில் மாணவர்கள் மீது நடத்திய தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ஈரோடு மனித நேய மக்கள் கட்சி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கருங்கல்பாளையம் காந்தி சிலை முன்பாக கையில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்திற்கு மனிநேய மக்கள் கட்சி கிழக்கு மாவட்ட தலைவர் சித்தீக் தலைமை தாங்கினார்.தலைமைக் கழக பேச்சாளர் கோவை செய்யது கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார் நிகழ்ச்சியில் மமக, மாவட்ட செயலாளர் சலீம், தமுமுக, மாவட்ட செயலாளர் லரீஃப் இளைஞரணி ஜீலானிகௌஸ், ரிஸ்வான், சாகுல் அமீர், மாணவரணி செயலாளர் முபாரக் சலீம், ஜாகிர்உசேன், சிக்கந்தர், இஸ்மாயில் சுல்தான் அலாவுதீன் கலந்து கொண்டனர்.

## தேசிய முக்குலத்தோர் கழகத்தினர் திருப்பூர் புதிய அதிமுக மாவட்ட செயலாளரை மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்



திருப்பூர், ஜூலை. 25–

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டச் செயலாளராக பதவி ஏற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி சிவசாமி அவர்களை தேசிய முக்குலத்தோர் கழகம் நிறுவனத் தலைவர் டெல்டா சுரேஷ் தென்னம்பிரியர் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார் உடன்.மாநில செயலாளர் . தனசேகர்.மாநில ஒருங்கிணைப்பாளர் சின்னசாமி. மாநில அமைப்பு செயலாளர் .விஜய கண்ணன்.மாநில வியாபாரிகள் சங்க செயலாளர்.பொள்ளாச்சி அபிராம் பிரசாத். இளைஞர அணி மாநில பொது செயலாளர் ஜனா.மாநில தொழிற்சங்க செயலாளர் ராஜாங்கம் அவர்கள் மோட்டார் தொழி ற்சங்க மாவட்ட தலைவர் அபுல்ஹாசன் மாவட்ட பொதுச் செயலாளர் ஜாபர் மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் மன்சூர், ஜாகீர் கழக மாநகர் மாவட்ட பொறுப்பாளர்கள் சுந்தர், தர்மா கலந்து கொண்டனர்.

## ஒட்டன்சத்திரத்தில் தூய்மை பணியாளர்களுக்கு அரசு சேவைகள் - நலத்திட்ட முகாம்!




ஒட்டன்சத்திரம், ஜூலை 25–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சி சார்பில், தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட முகாம் நடைபெற்றது.

நகராட்சி ஆணையர் ஸ்வேதா தலைமையில் நடைபெற்ற முகாமை, நகர்மன்றத் தலைவர் க. திருமலைசாமி, துணைத் தலைவர் ப. வெள்ளைச்சாமி, நகராட்சி பொறியாளர் சுப்பிரமணிய பிரபு, வட்டாட்சியர் சண்முகம் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர்.

முகாமில் மாற்றுத்திறனாளிகள் துறை, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை, டிஜிட்டல் சேவைகள், நிதித்துறைஉள்ளிட்ட பல்வேறு அரசு துறைகள் மூலம் சேவைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு சேவைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சுகாதார ஆய்வாளர் கார்த்திக்ராஜன், தாட்கோ மேலாளர் செல்வக்குமார், துணை வட்டாட்சியர் அன்சாரி, வருவாய் ஆய்வாளர் பூர்ணிமா, கிராம நிர்வாக அலுவலர் ஹரிகிருஷ்ணன், வட்டார சுகாதார ஆய்வாளர் தியாகராஜன், துப்புரவு மேற்பார்வையாளர்கள் வீரப்பன், காமராஜ் உள்ளிட்ட அதிகாரிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் திரளாக பங்கேற்றனர்.

## கீழக்கரையில் தூய்மை பணியாளர்களுக்கு அரசு சேவை - நலத்திட்ட முகாம்!




ராமநாதபுரம், ஜூலை. 25–

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சி மற்றும் சாயல்குடி பேரூராட்சி சார்பில், தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான ஒருங்கிணைந்த அரசு சேவை மற்றும் நலத்திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது.

முகாமில் நலவாரிய அடையாள அட்டை பதிவு, குடும்ப அட்டை சேவைகள், பட்டதாரி சான்றிதழ், ஆதார் சேவைகள், தாட்கோ கடனுதவி, மருத்துவப் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டன. நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணவேணி, சாயல்குடி பேரூராட்சி செயல் அலுவலர், நகர்மன்ற துணைத் தலைவர் ஹமீது சுல்தான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிரந்தர மற்றும் ஒப்பந்தத் தூய்மை பணியாளர்கள், அவர்களது குடும்பத்தினர் அரசின் சேவைகளை ஒரே இடத்தில் பெற்று பயன்பெற்றனர்.

## கீழக்கரை அரசு சுகாதார நிலையத்தை ஆட்சியர் ஆய்வு!




இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் ரூ.1.20 கோடியில் கட்டப்பட்ட நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் மா. சிவகுரு பிரபாகரன் ஆய்வு செய்தார். ஆய்வின்போது ஆம்புலன்ஸ் செல்லும் சாலையை சீரமைத்தல், நடைபாதை, நுழைவுவாயில், பேவர் பிளாக் தளம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை உடனடியாக மேம்படுத்தி, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நகராட்சி மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். ஆய்வில் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணவேணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மதுரை இந்து வழக்கறிஞர் முன்னணியின் அவசரக் கூட்டம்!

மதுரை, ஜூலை. 25–

மதுரை இந்து வழக்கறிஞர் முன்னணியின் அவசரக் கூட்டம் மாவட்டத் தலைவர் ஐ. சேகர் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் ல. பரமசிவம், வழக்கறிஞர்கள் பி. சுந்தரவடிவேல், மதன்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாவட்ட நீதிமன்றத்தின் பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தின் முடிவில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்:**

தற்போது டெல்லியில் ‘கரப் ஜந்தா கட்சி’ என்ற பெயரில் நடைபெற்று வரும் கலவரச் சம்பவங்கள் கண்டனத்திற்குரியதாகும். மாணவர்கள் பிரச்சினைகள் குறித்து போராட மாணவர்களுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன. ஆனால் அதனைச் சாக்காக வைத்து, மாணவர்கள் என்ற போர்வையில் நடைபெற்று வரும் அனைத்து சட்டவிரோத செயல்களையும் தடுக்க டெல்லி காவல்துறை எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கிறோம்.

மத்திய அரசு இரும்புக்கரம் கொண்டு கலவரங்களை அடக்க வேண்டும். அதற்கு நாட்டு மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேசப்பற்று மிக்க வழக்கறிஞர் சமூகம் அதற்கு ஆதரவளிக்கும்.

தமிழக அரசும், மாணவர்கள் என்ற பெயரில் சமூக அமைதியைக் குலைக்கும் சமூக விரோதிகள் மீது ஆரம்பத்திலேயே கடுமையான நடவடிக்கை எடுத்து, தமிழகத்தின் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட பொதுச் செயலாளர் பெருமாள்சாமி நன்றி கூறினார்.



## ஜாதக பலன் துல்லியமாக வேண்டுமா?



ஜாதகம் பார்க்க உகந்த நேரமும், தவிர்க்க வேண்டிய நாட்களும் இருப்பதாக இந்து மரபு மற்றும் சில ஜோதிட நம்பிக்கைகள் கூறுகின்றன.

**ஜாதகம் பார்க்கக் கூடாத நாட்கள்**

சனிக்கிழமை
ஞாயிற்றுக்கிழமை
செவ்வாய்க்கிழமை (வாழ்க்கை, திருமணம் போன்ற விஷயங்களுக்கு)
அமாவாசை நாள்
கரிநாள்
அஷ்டமி, நவமி, பிரதமை திதிகள்
ராகுகாலம், எமகண்டம்
சூரிய அஸ்தமன நேரம்
கிருத்திகை, பரணி, ஆயில்யம், கேட்டை, பூரம் நட்சத்திர நாட்கள்

**ஜாதகம் பார்க்க உகந்த நாட்கள்**

புதன்கிழமை
வியாழக்கிழமை
வெள்ளிக்கிழமை

இந்த நாட்களிலும் நல்ல நேரம், யோகம், கரிநாள் இல்லாத நேரம் பார்த்து ஜாதகம் பார்ப்பது சிறந்ததாகக் கருதப்படுகிறது.

திருமண ஜாதக பொருத்தம் பார்க்கும்போது 10 பொருத்தங்கள் மட்டும் போதாது.

மணமகன்மணமகள் இருவரின் முழு ஜாதக அமைப்பு, மாங்கல்ய பலம், குடும்ப வாழ்க்கை, தொழில், கிரக நிலைகள் போன்றவற்றையும் ஆய்வு செய்ய வேண்டும்.

**நிலம், சொத்து தொடர்பான விஷயங்கள்**

நிலம், வீடு, பூமி வாங்குவது போன்ற விஷயங்களுக்காக செவ்வாய்க்கிழமையில் ஜாதகம் பார்க்கலாம் என சில ஜோதிட மரபுகள் கூறுகின்றன.

**குறிப்பு:** மேற்கண்ட தகவல்கள் இந்து ஜோதிட மரபு மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளைஅடிப்படையாகக் கொண்டவை. இவை அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மைகள் அல்ல; ஒவ்வொருவரின் மத நம்பிக்கை மற்றும் தனிப்பட்ட விருப்பத்தைப் பொறுத்து பின்பற்றப்படுகின்றன.

## நந்தினி கொடுத்த அதிர்ச்சி... ஆவின் முடிவு என்ன?




பெங்களூரு, ஜூலை. 25–

கர்நாடக அரசின் நந்தினி பிராண்டு நெய் மற்றும் வெண்ணெய் விலை ஜூலை 24 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு லிட்டர் நெய் ₹15 உயர்ந்து ₹715 ஆகவும், ஒரு கிலோ வெண்ணெய் ₹50 உயர்ந்து ₹660 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது.

உற்பத்திச் செலவு மற்றும் சந்தை நிலவரம் காரணமாக இந்த விலை உயர்வு அமல்படுத்தப்பட்டதாக கர்நாடக பால் கூட்டுறவு (KMF) தெரிவித்துள்ளது. இருப்பினும், பிற பிராண்டுகளை விட நந்தினி விலை இன்னும் குறைவாகவே இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, தமிழக அரசின் ஆவின் நிறுவனமும் பால் பொருட்களின் விலையை உயர்த்துமா?என்ற கேள்வி எழுந்துள்ளது. தற்போது ஆவின் ஒரு லிட்டர் நெய் ₹690 மற்றும் ஒரு கிலோ வெண்ணெய் ₹550க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுவரை விலை உயர்வு குறித்து தமிழக அரசு அல்லது ஆவின் தரப்பில் எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை.

## 48 ஒளி ஆண்டுகளில் அதிசயம்... உயிர்கள் வாழும் கோளா இது?




பூமியில் இருந்து 48 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள LHS 1140 b என்ற பாறைக் கோளில், முதன்முறையாக வளிமண்டலம் இருப்பதை விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். உயிர்கள் வாழ ஏற்ற மண்டலத்தில் அமைந்துள்ள இந்தக் கோளில் ஹீலியம் உள்ளிட்ட வாயுக்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. உயிர்கள் இருப்பது இன்னும் உறுதியாகாத நிலையில், பூமிக்கு அப்பால் வாழ்வைத் தேடும் ஆய்வில் இது முக்கிய முன்னேற்றம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### மாலை ஸ்நாக்ஸ் பழக்கம் ஆபத்து... இதய நோயுடன் புற்றுநோய் அபாயமும் அதிகரிப்பு!




மாலை நேரங்களில் பஜ்ஜி, போண்டா, சமோசா, சிப்ஸ், பிஸ்கட், ஃபாஸ்ட் ஃபுட் போன்ற எண்ணெயில் பொரித்த மற்றும் மைதா உணவுகளை அடிக்கடி சாப்பிடும் பழக்கம் உடல்நலத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். இந்த உணவுகளில் உள்ள டிரான்ஸ் கொழுப்பு உடலில் கெட்ட கொழுப்பின் (LDL) அளவை உயர்த்தி, இதய நோய், மாரடைப்பு மற்றும் ரத்த நாள அடைப்பு அபாயத்தை அதிகரிக்கிறது. மைதா உணவுகள் ரத்த சர்க்கரை அளவை வேகமாக உயர்த்துவதால், நீரிழிவு நோயாளிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், மாலை 6 மணிக்குப் பிறகு அதிகமாக டீ, காபி அருந்துவது தூக்கத்தின் தரத்தை பாதிக்கும். அதேபோல், பதப்படுத்தப்பட்ட அல்லது அதிகமாக சமைக்கப்பட்ட சிவப்பு இறைச்சியை தொடர்ந்து சாப்பிடுவது சில வகை புற்றுநோய் அபாயத்தையும் அதிகரிக்கக்கூடும். இதற்கு மாற்றாக சுண்டல், வேகவைத்த நிலக்கடலை, முளைகட்டிய பயறு, பழங்கள், தயிர், கம்பு மற்றும் ராகி உணவுகள் போன்ற சத்தான சிற்றுண்டிகளை தேர்வு செய்வது இதய ஆரோக்கியம், செரிமானம் மற்றும் உடலின் ஒட்டுமொத்த நலனை பாதுகாக்க உதவும் என மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## சினிமா துளிகள்..!

### மீண்டும் வில்லியாக மிரட்டும் ‘Obsession’ நாயகி!



ஹாலிவுட்டில் கவனம் பெற்ற ‘Obsession’ திரைப்படத்தின் நாயகி இண்டே நவரெத் மீண்டும் வில்லத்தனமான கதாபாத்திரத்தில் ரசிகர்களை மிரட்ட தயாராகியுள்ளார். ‘Obsession’ படத்தில் அவரது தீவிரமான மற்றும் உளவியல் ரீதியான நடிப்பு ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களின் பாராட்டைப் பெற்றது. அந்த வெற்றியைத் தொடர்ந்து, தற்போது உருவாகும் புதிய திரைப்படத்திலும் வலுவான எதிர்மறை கதாபாத்திரத்தில் நடிக்க பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த வேடம் அவரது நடிப்பு திறமையை மேலும் வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஹாரர் மற்றும் த்ரில்லர் கதைகளில் தொடர்ந்து நடிக்க விருப்பம் இருப்பதாக சமீபத்திய பேட்டிகளில் நவரெத் தெரிவி த்துள்ளார். ‘Obsession’ திரைப்பட வெற்றிக்குப் பிறகு ஹாலிவுட்டின் வளர்ந்து வரும் இளம் நட்சத்திரங்களில் ஒருவராக உருவெடுத்துள்ள அவர், புதிய வில்லி கதாபாத்திரத்தின் மூலம் மீண்டும் ரசிகர்களை அச்சுறுத்த தயாராக இருப்பதாக திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### அனிருத் இசையில் ‘டிசி’ இசை விருந்து... தரமான ஆல்பம் வெளியீடு!




இயக்குநர் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில், இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கதாநாயகனாக அறிமுகமாகும் ‘டிசி’திரைப்படத்தின் முழு இசை ஆல்பம் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அனிருத் ரவிச்சந்தர் இசையமைத்துள்ள இந்த ஆல்பத்தில் மொத்தம் 15 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஏற்கனவே வெளியான ‘ஹேங்க் ஓவா’ மற்றும் ‘பூம் பா டிகா டிகா’ உள்ளிட்ட பாடல்கள் சமூக வலைதளங்களில் வைரலான நிலையில், முழு ஆல்பமும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளதாக கருத்துகள் வெளியாகியுள்ளன. வாமிகா கபி, சஞ்சனாஉள்ளிட்டோர் நடித்துள்ள இப்படத்தை சன் பிக்சர்ஸ் தயாரித்துள்ளது. அனிருத்தின் பின்னணி இசையும், வித்தியாசமான இசை அமைப்பும் படத்தின் மீது கூடுதல் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளன. ஆகஸ்ட் 7–ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ள ‘டிசி’, ஆண்டின் முக்கியமான ஆக்ஷன் திரைப்படங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

# கூடுதல் விலைக்கு மது விற்றால் அபராதம்...!




சென்னை, ஜூலை. 25–

டாஸ்மாக் மதுபான கடைகளில் மதுபானங்களை அதிகபட்ச சில்லரை விற்பனை விலையை (எம்.ஆர்.பி) விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து அனைத்து மாவட்ட மேலாளர்களுக்கும் டாஸ்மாக் நிர்வாகம் சுற்றிக்கை ஒன்றை அனுப்பி உள்ளது. அந்த சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:– டாஸ்மாக் மதுபான கடைகளில் எம்.ஆர்.பி. யைவிட கூடுதல் விலைக்கு மதுபானம் விற்பனை செய்ததாக நுகர்வோரிடமிருந்து புகார் பெறப்பட்டாலோ அல்லது டாஸ்மாக் அலுவலர்களின் திடீர் ஆய்வின்போது கண்டறியப்பட்டாலோ, கூடுதல் விலைக்கு விற்பனை செய்தது உறுதிசெய்யப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட கடையின் பணியாளர்கள் (மேற்பார்வையாளர், விற்பனையாளர் மற்றும் உதவி விற்பனையாளர்) மீது கீழ்க்கண்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

* முதல் முறை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தது கண்டறியப்பட்டால், ஒருமாத காலம் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட பணியாளரிடமிருந்து அபராதம் வசூலிக்கப்பட வேண்டும். தற்காலிக பணியிடை நீக்க காலமான ஒரு மாதத்திற்கு தொகுப்பூதியம் வழங்கப்படாது. ஒரு மாத பணியிடை நீக்கம் முடிந்த பின், இனி மேல் இதுபோன்ற தவறு செய்யமாட்டேன் என்ற உறுதிமொழி பெற்றுக் கொண்டு, தலைமையக ஒப்புதலுடன், அவர் மீண்டும் பணியில் அமர்த்தப்பட வேண்டும்.

* 2–வது முறையாக கூடுதல் விலைக்கு விற்பனை செய்தது கண்டறியப்பட்டால், 3 மாத காலம் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட வேண்டும். பணியாளரிடமிருந்து அபராதம் வசூலிக்கப்பட வேண்டும். 3 மாத தற்காலிக பணியிடை நீக்க காலத்திற்கு தொகுப்பூதியம் வழங்கப்படாது. 3 மாத பணியிடை நீக்கம் முடிந்த பின், இனிமேல் இதுபோன்ற தவறு செய்ய மாட்டேன் என்ற உறுதிமொழி பெற்றுக்கொண்டு, தலைமையக ஒப்புதலுடன், அவர் பணிபுரியும் கடையில் இருந்து அதே மாவட்டத்தில் உள்ள மதுபானக் கிடங்கிற்கு பணிமாற்றம் செய்யப்பட்டு, குறைந்தது 3 மாதங்கள் அங்கு பணியாற்ற வேண்டும்.

* 3–வது முறை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட பணியாளர் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, குற்றக் குறிப்பாணை வழங்கி உள்விசாரணை நடத்த வேண்டும். உள்விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டால், நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

ரூ.1 முதல் 9 வரை கூடுதலாக வசூல் செய்தால், ரூ.1–க்கு ரூ.1,000 வீதம் அதிகபட்சமாக ரூ.9,000 என்ற வீதத்தில் அபராதம் விதிக்க வேண்டும். ரூ.10 மற்றும் அதற்கு மேல் கூடுதலாக வசூல் செய்தால் ரூ.10 ஆயிரம் மட்டும் விதிக்க வேண்டும். அபராத தொகையில் 60 சதவீதத்தை விற்பனை செய்த பணியாளரும், 40 சதவீதத்தை அப்போது கடையில் உடன் இருந்த மேற்பார்வையாளரும் (மேற்பார்வையாளர் ஆஜரில் இல்லாத பட்சத்தில் விற்பனை செய்த பணியாளர் அபராத தொகையினை முழுவதுமாக) செலுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## டெல்லியில் 4-வது நாளாக 18 மெட்ரோ ரெயில் நிலையங்கள் மூடல்!



புதுடெல்லி, ஜூலை. 25–

மாணவர் போராட்டத்தையடுத்து தொடர்ந்து நான்காவது நாளாக டெல்லியில் இன்று 18 மெட்ரோ ரெயில் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இன்று காலை 7.30 மணி முதல் அடுத்த அறிவிப்பு வரும் வரை, 18 மெட்ரோ ரெயில் நிலையங்கள் மூடப்படுவதாக மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதன்படி லோக் கல்யாண் மார்க், ராஜீவ் சௌக், படேல் சௌக், ராமகிருஷ்ண ஆசிரம மார்க், பாரகாம்பா சாலை, உச்ச நீதிமன்றம், சேவா தீர்த்தம், ஜன்பத், மண்டி ஹவுஸ், மத்திய செயலகம், ஐடிஓ, டெல்லி கேட், இந்திரபிரஸ்தா, கான் மார்க்கெட், ஜோர் பாக், சிவாஜி ஸ்டேடியம், ஜண்டேவாலன் மற்றும் புதுடெல்லி ஆகிய மெட்ரோ நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

அதே சமயம் ராஜீவ் சவுக், மண்டி ஹவுஸ் மற்றும் சென்ட்ரல் செக்ரட்டேரியட் மெட்ரோ நிலையங்களில் இன்டர்சேஞ்ச் வசதி மட்டும் வழக்கம்போல் தொடர்ந்து கிடைக்கும் என்று டெல்லி மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## காரீப் பருவத்துக்கு 48% கூடுதல் யூரியா இருப்பு!



புதுடெல்லி, ஜூலை. 25–

நடப்பு காரீப் பருவத்துக்கான யூரியா இருப்பு கிட்டத்தட்ட 48 சதவீதம் கூடுதலாக இருப்பதாக, மத்திய உரத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார். இதுகுறித்து பார்லி.,யில் அவர் எழுத்துபூர்வமாக அளித்துள்ள விளக்கம்: நடப்பு காரீப் பருவத்துக்கான யூரியா தேவை, 109 லட்சம் டன். ஆனால், இருப்பு 164 லட்சம் டன். அதாவது, உபரியாக 48 சதவீதம் யூரியா உள்ளது.

நடப்பு நிதியாண்டில் உள்நாட்டில் யூரியா உற்பத்தி, 269 லட்சம் டன்னாக இருக்கும். உள்நாட்டில் யூரியா உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், மத்திய அரசு 6 புதிய யூரியா உற்பத்தி மையங்களை அமைத்துள்ளது. இதோடு யூரியா உற்பத்தி துறையை மேலும் ஊக்கப்படுத்த, தேசிய யூரியா முதலீட்டு கொள்கை 2026க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செக் மோசடி வழக்கு: நடிகர் விமலுக்கு ஓராண்டு சிறை!




‘மன்னர் வகையறா’ திரைப்படத்திற்காக பெற்ற ரூ.4.5 கோடி கடனை திருப்பிச் செலுத்தாதது தொடர்பான செக் மோசடி வழக்கில், நடிகர் விமலுக்கு சென்னை நீதிமன்றம் ஓராண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கடனுக்காக வழங்கிய காசோலை, வங்கியில் பணம் இல்லாததால் திரும்பியதை அடுத்து தொடரப்பட்ட வழக்கில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக நீதிமன்றம் தெரிவித்தது. மேலும், பெற்ற தொகையையும் திருப்பிச் செலுத்த உத்தரவிட்டது. எனினும், மேல்முறையீடு செய்ய இருப்பதாக விமல் தரப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து, சிறைத்தண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைத்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 6 நாட்களுக்கு பிறகு மீண்டும் தொடங்கிய அமர்நாத் யாத்திரை!



காஷ்மீர், ஜூலை. 25–

வானிலை சீரடைந்ததை தொடர்ந்து அமர்நாத் யாத்திரை இன்று மீண்டும் தொடங்கியது.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில், அமர்நாத் யாத்திரைக்கான 18வது குழு 6,269 பக்தர்களைக் கொண்ட புதிய குழு இன்று அதிகாலை பால்டால் முகாமில் இருந்து புறப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் 25 குழந்தைகள், 1470 பெண்கள், 54 சாதுக்கள் உள்ளிட்டோரும் அடங்குவர். 223 வாகனங்கள் கொண்ட அணிவகுப்பில் 18வது குழு பயணித்துள்ளது.

முன்னதாக, அமர்நாத் யாத்திரைக்கான முன்பதிவு கடந்த ஏப்ரல் 15–ம் தேதி தொடங்கியது. நபர் ஒருவர் ரூ.150 கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். மருத்துவ சான்றிதழ் ஒன்றையும் கட்டாயம் கொண்டு வர வேண்டும். நடப்பு ஆண்டில் 5 நாட்களில் 90 சதவீதம் அளவுக்கு பனிலிங்கம் உருகியது என்றாலும், பக்தர்களின் கூட்டம் குறையாமல் அதிகரித்து வருகிறது.

## மனைப்பிரிவு திட்டங்களுக்கு 30 நாட்களில் அனுமதி - மாநகராட்சி நிர்வாகங்கள் நடவடிக்கை!



சென்னை, ஜூலை. 25–

தமிழகத்தில் கட்டுமான திட்டங்கள் போன்று, மனைப்பிரிவு திட்டங்களுக்கு, விரைவாக ஒப்புதல் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, புதிய மனைப்பிரிவு திட்டங்களை செயல்படுத்த, ரியல் எஸ்டேட் நிறுவனங்கள், நகர், ஊரமைப்பு துறையான டி.டி.சி.பி.,யில் விண்ணப்பிக்கின்றன. அவற்றை பரிசீலித்து, அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில், அதிக தாமதம் ஏற்படுவதாக புகார்கள் எழுகின்றன.

புதிய மனைப்பிரிவு திட்டங்களை பொறுத்தவரை, அடிப்படை விவரங்களை ஆய்வு செய்து, டி.டி.சி.பி., தொழில்நுட்ப அனுமதி வழங்கும். இதன் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகள் முறையான, இறுதி ஒப்புதலை அளிக்க வேண்டும். இதற்காக வரும் மனுக்கள் மீது, விரைவாக நடவடிக்கை எடுக்க, அதிகாரிகளுக்கு மாநகராட்சி நிர்வாக ங்கள், சில வழி காட்டுதல்களை வழங்கி உள்ளன. அதில் கூறப்பட்டுள்ளதாவது;–

* டி.டி.சி.பி., தொழில் நுட்ப அனுமதி வழங்கியதும், ஓ.எஸ்.ஆர்., நிலதான ஒப்படைப்புக்கான, பத்திரத்துடன், விண்ணப்பதாரர் மாநகராட்சியை அணுக வேண்டும்
* மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் பராமரிப்புக்கு, ஒரு லட்சம் ரூபாய் வைப்பு தொகையாக பெற வேண்டும்.
* மனைப்பிரிவு ஒப்புதல் தொடர்பான அனைத்து பணிகளையும், ‘ஆன்லைன்’ வாயிலாக மட்டுமே மேற்கொள்ள வேண்டும்
* அடிப்படை வசதிகளுக்கான முழுத் தொகையையும், மனுதாரர் செலுத்தும் நிலையில், 30 நாட்களுக்குள் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்
* மனுதாரரே அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளும் நிலையில், 60 நாட்களுக்குள் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## யூனியன் வங்கி ஆஃப் இந்தியா 395 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: யூனியன் வங்கி ஆஃப் இந்தியா
வேலைவகை: மத்திய அரசு / பொதுத்துறை வங்கி வேலை
பணியின் தன்மை: நிரந்தர பணி
மொத்த காலியிடங்கள்: 395
பணியிடங்கள்
மேலாளர் (Manager Scale MMGS–II)
மூத்த மேலாளர் (Senior Manager Scale MMGS–III)
தலைமை மேலாளர் (Chief Manager Scale SMGS–IV)
உதவி பொது மேலாளர் (Assistant General Manager Scale SMGS–V)
துணை பொது மேலாளர் (Deputy General Manager Scale TEGS–VI)
பணியிடம்: இந்தியா முழுவதும்
முக்கிய தேதிகள்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 21.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 10.08.2026 (இரவு 11.59 மணி வரை)
விண்ணப்பிக்கும் முறை
ஆன்லைன் மூலம் மட்டும்
அதிகாரப்பூர்வ இணையதளம்
https://www.unionbankofindia.bank.in/

குறிப்பு: வயது வரம்பு, கல்வித் தகுதி, அனுபவம், தேர்வு முறை, விண்ணப்பக் கட்டணம் உள்ளிட்ட முழு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் படித்த பிறகே விண்ணப்பிக்கவும்.

## அட்மா திட்டம்: தென்னந்தோப்புகளில் வயல்வெளி ஆய்வு!



ராமநாதபுரம், ஜூலை. 25–

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் புதுவலசை கிராம தென்னந்தோப்புகளில் வயல்வெளி ஆய்வு நடைபெற்றது.

வேளாண்மை துணை இயக்குநர் ராஜேந்திரன், வேளாண்மை அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் டாக்டர் ஜெகதீசன் ஆகியோர் பூச்சி, நோய் தாக்கிய மரங்களை ஆய்வு செய்து, மக்னீசியம் சத்துக்குறைபாடு, காண்டாமிருக வண்டு, சிவப்பு கூன் வண்டு மற்றும் தஞ்சாவூர் வாடல் நோய் கட்டுப்பாடு குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.

மேலும், கால்நடைகளுக்கு தாது உப்பு கலவை மற்றும் சுருள் வெள்ளை ஈ கட்டுப்பாட்டிற்கான வேம்பு சார்ந்த இடுபொருட்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

## கிளாம்பாக்கம்-செங்கல்பட்டு மெட்ரோ ரெயில் திட்டம் - விரிவான அறிக்கை தயார் செய்ய டெண்டர் வெளியீடு!



சென்னை, ஜூலை. 25–

சென்னை மெட்ரோ முதலாம் கட்ட திட்டமான சென்ட்ரல்–விமானநிலையம்வழித்தடத்தை கிளாம்பாக்கம் வரை நீட்டிப்பு செய்வது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கிளாம்பாக்கத்தில் இருந்து செங்கல்பட்டு வரையிலான மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க டெண்டர் கோரி சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தற்போது அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே சென்னை மெட்ரோ ரெயில் முதல் கட்டத்தின் சென்ட்ரல்–விமான நிலைய வழித்தடத்தை கிளாம்பாக்கம் வரை நீட்டிப்பதற்கான திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்காக காத்திருக்கக்கூடிய நிலையில், இதனை மேலும் செங்கல்பட்டு வரை நீட்டிப்பதற்கான டெண்டர் தற்போது கோரப்பட்டிருக்கிறது. இதற்கான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும் பட்சத்தில், அடுத்த கட்டமாக இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கு மத்திய அரசிடம் ஒப்புதலுக்காக சென்னை மெட்ரோல் நிறுவனம் கோரிக்கை விடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## குதிரை பேரம்: செந்தில் பாலாஜியிடம் விசாரணை!



சென்னை, ஜூலை. 25–

தவெக எம்.எல்.ஏ.வை பேரம் பேசி ஆட்சி கவிழ்க்க முயன்றதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அசோக் குமாருக்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் நிபந்தனையுடன் முன்ஜாமீன் வழங்கியது. 25 ஆயிரம் ரூபாய் சொந்த ஜாமீனும், அதே தொகைக்கான இருநபர் ஜாமீனும் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டு இருந்தது. மேலும், மறு உத்தரவு வரும் வரை காலையும், மாலையும் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜராக நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

இதற்கிடையே, போலீசார் தங்களை துன்புறுத்தக் கூடாது என உத்தரவிடக் கோரி ஐகோர்ட்டில் இருவரும் மனுத்தாக்கல் செய்தனர். இந்த மனு விசாரணையி ன்போது, "முன் ஜாமின் வழங்கப்பட்டு இதுவரை இருவரும் சரணடை யவில்லை. சரணடையாத பட்சத்தில் துன்புறுத்தக்கூ டாது என எப்படி கோர முடியும்? என நீதிபதி கேள்வி எழுப்பியதுடன், இருவரது மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

இந்த நிலையில், நீதிமன்றம் ஜாமீன் வழங்கிய நிலையில், செந்தில் பாலாஜி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்துக்கு நேற்று வந்து பிணைத்தொகை செலுத்தினார். அதனை தொடர்ந்து, நீதிமன்ற உத்தரவுப்படி இன்று சென்னை திருவல்லிக்கேணி காவல்நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட்டார். அவருடன் அவரது சகோதரர் அசோக்குமாரும் காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட்டார்.

## இலங்கை கடற்படை கைது செய்த தமிழக மீனவர்களை மீட்க வலியுறுத்தி 2-வது நாளாக வேலைநிறுத்தம்!



ராமேஸ்வரம், ஜூலை. 25–

ராமேசுவரத்தில் மீனவர்கள் கைது விவகாரம் குறித்து அனைத்து மீனவர்கள் சங்கம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 9 மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி 3 நாள்களுக்கு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்ய முடிவெடுக்கப்பட்டது.

இதன்படி, இரண்டாவது நாளாக இன்றும் (ஜூலை 25) ராமேசுவர மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால், 10,000–க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையோரத்திலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், எப்போதும் பரபரப்பாகக் காணப்படும் ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகம் இரு நாள்களாக வெறிச்சோடிக் காணப்படுகிறது.

## போலியோ பாதிப்பு, விடாமுயற்சி... கிளாஸ்கோ காமன்வெல்த் போட்டியில் இந்தியாவுக்கு முதல் பதக்கம்!



புதுடெல்லி, ஜூலை. 25–

பிகாரைச் சேர்ந்த ஜாண்டு குமார் (28 வயது) தனது சிறுவயதில் போலியோவால் பாதிக்கப்பட்டவர். தற்போது, உலக அரங்கில் இந்தியாவுக்கு முதல் பதக்கத்தை பெற்றுத்தந்துள்ளார். ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் 23–ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் கோலாகலமாக வியாழக்கிழமை தொடங்கின.

ஜாண்டு குமார் பாரா பவர்லிஃப்டிங் பிரிவில் 130.9 புள்ளிகளைப் பெற்று பதக்கத்தை உறுதிசெய்தார். இந்தப் போட்டியில் 181 கிலோ, 190 கிலோ பளுவைத் தூக்கினார். 196 கிலோ பளுவைத் தூக்கும்போது சற்று தவறிவிட்டார்.

இதே பிரிவில் மற்றுமொரு இந்தியரான சுதீர் 114.1 புள்ளிகள் பெற்று ஆறாவது இடத்தைப் பிடித்தார். நைஜீரியாவைச் சேர்ந்த இத்ரிஸ் ரிலுவான் 132.8 புள்ளிகள் பெற்று தங்கம் வெல்ல, மேத்திவ் ஹார்டிங் 131 புள்ளிகள் பெற்று வெள்ளி வென்றார்.

மகளிர் குத்துச்சண்டையில் 75 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் லவ்லினா போர்கோஹெய்ன், முதல் சுற்று 'பை' பெற்று நேரடியாக அரையிறுதிக்குத் தகுதிபெற்றதால், அவரும் பதக்கத்தை உறுதி செய்துள்ளது கவனிக்கத்தக்கது.

பிகாரின் நாளந்தா மாவட்டத்தில் ஹர்னூட் கிராமத்தில் பிறந்தவர் ஜாண்டு குமார். இவர்களது பெற்றோர்கள் காய்கறி விற்று வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். அவர் பெற்றோருக்கு உதவியாக இருந்து வருகிறார்.

ஜாண்டு குமாருக்கு ஐந்து வயதிலிருக்கும்போதே போலியோ பாதிப்பு ஏற்பட்டது. ஆனாலும் தனது ஆர்வத்தை விடாமல் போராடி வருகிறார். 2010 முதல் 2012 வரை தனது உடல் நலனுக்காக பயிற்சி செய்கிறார்.

தொடக்கத்தில் குண்டு எறிதலில் ஆர்வமாக பங்கேற்று மாவட்ட, மாநில அளவில் பரிசுகள் வென்றுள்ளார். பின்னர், பவர்லிஃப்டிங் மீது ஆர்வம் வந்து இதிலும் அசத்தி வருகிறார்.

நண்பர்களிடம் கடன் வாங்கி இ–ரிக்ஸா வாங்கியிருக்கிறார். ஆனாலும் அதுவும் கரோனா கால்கட்டத்தில் சொதப்பியிருக்கிறது. இருந்தும் விடாமுயற்சியில் தற்போது இந்தியாவுக்கு முதல் பதக்கத்தை வென்று கொடுத்துள்ளார்.

## வரிஏய்ப்போர் மீது கடும் நடவடிக்கை எடுங்கள் - நிர்மலா சீதாராமன்!




புதுடெல்லி, ஜூலை. 25–

டெல்லியில், 167–வது வருமானவரித்துறை தின கொண்டாட்ட நிகழ்ச்சி நடந்தது. அதில், மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:–

"வருமானவரித்துறை அதிகாரிகள் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும். வேண் டுமென்றே வரிஏய்ப்பு செய்பவர்களையும், அறியாமல் தவறுகள் செய்பவர்களை யும் அடையாளம் கண்டு பிரிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

வரிஏய்ப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில் நேர்மையாக வரிசெலுத்துவோருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். வரிச்சட்டம் உங்க ளுக்கு அளித்த அதிகாரத்தை பணிவுடன் பயன்படுத்துங்கள். சுறுசுறுப்பாக செயல்படுங்கள்." இவ்வாறு அவர் பேசினார்.

## திருவண்ணாமலையில் சாமி தரிசனத்தின்போது மூச்சு த் திணறல் ஏற்பட்டு பக்தர் உயிரிழப்பு!



திருவண்ணாமலை, ஜூலை. 25–

திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள இடுக்கு பிள்ளையார் கோயிலில் சாமி தரிசனம் செய்யும்போது மூச்சுத் திணறல் ஏற்பட்டு ஆந்திராவைச் சேர்ந்த மணிக்குமார் (36) என்ற பக்தர் உயிரிழந்தார். உடல் பருமன் காரணமாக வெளியில் வர முடியாமல் தவித்த அவரை பொதுமக்கள் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## வார இறுதியில் உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, ஜூலை. 25–

வார இறுதிநாளில் தங்கம் விலை உயர்ந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு 70 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.13,300–க்கும் சவரனுக்கு 560 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.240–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## இந்தியாவின் எதிர்காலத்தை பிரதமர் நரேந்திர மோடியால் தீர்மானிக்க முடியாது: ராகுல் காந்தி!



டெல்லி, ஜூலை. 25–

தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற மாணவர்களின் கோரிக்கையை அரசு கண்டு கொள்ளவே இல்லை என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். மேலும், ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் தர்மேந்திர பிரதான் விலகல் குறித்து விவாதிக்கப்படவில்லை என்றும், இந்தியாவின் எதிர்காலத்தை பிரதமர் நரேந்திர மோடியால் தீர்மானிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

## முட்டை விலை ஒரே நாளில் 30 காசுகள் சரிவு!



நாமக்கல், ஜூலை. 25–

நாமக்கல் மண்டலத்தில் முட்டை வரலாற்றில் உச்ச பட்சமாக கடந்த 16 –ந்தேதி 680 காசுககளாக முட்டை விலை உயர்ந்தது. பின்னர் எந்த மாற்றமும் இல்லாமல் கடந்த 8 நாட்களாக அதே விலையில் நீடித்தது. இந்த நிலையில் நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடந்தது.

இதில் முட்டையின் உற்பத்தி மற்றும் தேவை குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. அப்போது கடந்த மாதம் 7 கோடியாக இருந்த முட்டையின் உற்பத்தி தற்போது 8 கோடியை நெருங்கி உள்ளதால் முட்டைகள் தேக்கம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் முட்டை விலையை 30 காசுகள் குறைக்க முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து 680 காசுகளாக இருந்த முட்டை விலை 30 காசுகள் சரிந்து 650 காசுகளான நிர்ணயிக்கப்பட்டது.

இந்த விலை சரிவு இன்று காலை முதல் அமுலுக்கு வந்துள்ளது. தற்போது சில்லரை விற்பனை கடைகளில் 8 ரூபாய்க்குஒரு முட்டை விற்கப்படுவதால் இனி வரும் நாட்களில் முட்டை விலை குறையும் என்பதால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தலைமைச் செயலகம் புதிய முகவரி?



சென்னை, ஜூலை. 25–

சென்னையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வரும் தமிழக தலைமைச் செயலகத்தை, நகரின் வேறு இடத்துக்கு மாற்றி புதிய தலைமைச் செயலக வளாகம் அமைப்பது குறித்து தமிழக அரசு தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகி யுள்ளது. தற்போது, முதலமைச்சர் சி. ஜோசப் விஜய், கோட்டை வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10–வது மாடியில் புதுப்பிக்கப்பட்ட அலுவலகத்துக்கு விரைவில் இடம் மாற உள்ளதாகவும், அதற்கான பாதுகாப்பு ஆய்வுகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

புதிய தலைமைச் செயலகத்துக்கான இடமாக பட்டினப்பாக்கம் (Foreshore Estate) மற்றும் கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகம் (Highways Research Sta–tion Campus) ஆகிய பகுதிகள் பரிசீலிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. இருப்பினும், புதிய தலைமைச் செயலகம் அமைப்பது தொடர்பான ஆலோசனைகள் அரசின் உயர்மட்டத்தில் நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைமைச் செயலகத்தை மாற்றுவது குறித்து அதிகாரிகள் விளக்கமளிக்கையில், தற்போதைய கோட்டை வளாகத்தில் இடப்பற்றாக்குறை, புதிய கட்டடங்கள் அமைப்பதற்கான பாரம்பரிய மற்றும் பாதுகாப்பு கட்டுப்பாடுகள், வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறைவு போன்ற காரணங்களால் நிர்வாக பணிகளில் சிரமம் நிலவுவதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், நிதித்துறை உள்ளிட்ட முக்கிய துறைகளின் அலுவலகங்களில் இட நெருக்கடி அதிகமாக இருப்பதால், ஊழியர்கள் சுதந்திரமாக பணியாற்றவும், பொதுமக்களுக்கு சேவை வழங்கவும் சிரமம் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.

1644–ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட புனித ஜார்ஜ் கோட்டை, இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு தமிழக அரசின் தலைமைச் செயலகமாக செயல்பட்டு வருகிறது. 2010–ல் ஓமந்தூரார் அரசு தோட்டத்தில் புதிய சட்டப்பேரவைதலைமைச் செயலக வளாகம் திறக்கப்பட்டாலும், 2011–ல் மீண்டும் தலைமைச் செயலகம் புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றப்பட்டது.




சக்திநகரில் குமரகுரு வேளாண்மைக் கல்லூரியில் புதிதாக கட்டப்பட்ட 'அருட்செல்வர் அரங்கம்' திறக்கப்பட்டது. விழாவில் அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், அருட்செல்வரின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலப் பணிகளைப் பாராட்டி, "வேளாண்மையே இந்திய கலாசாரம்; அதை ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது" என்று வலியுறுத்தினார். விழாவில் முற்போக்கு விவசாயிக்கான அருட்செல்வர் விருது வி.டி. வள்ளுவன், சி. சுப்பிரமணியம் விருது ஸ்கை வி. சுந்தர்ராஜ், நம்மாழ்வார் விருது எம். பாலசுப்பிரமணியன் (பாமயன்) ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

## விவசாயத்துக்கான 18 மணி நேர இலவச மும்முனை மின்சாரம் தொடர்கிறது: மின்வாரியம் விளக்கம்!



சென்னை, ஜூலை. 25–

விவசாய பம்ப் செட்டுகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்பட்டு வரும் 18 மணிநேர இலவச மும்முனை மின்சாரம் 14 மணி நேரமாகக் குறைக்கப்பட்டதாக வெளியான தகவலை மின்வாரியம் மறுத்துள்ளதுடன், அந்தத் திட்டம் தொடர்வதாகவும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு மின்வாரியம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக விவசாயிகளுக்கு தற்போது நாளொன்றுக்கு 18 மணிநேரம் இலவச மும்மு னை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மின் கட்டமைப்பில் எதிர்பா ராத தொழில்நுட்பக் கோளாறு கள் அல்லது அவசர பராமரி ப்புப் பணிகள் காரணமாக சில மணிநேரங்களுக்கு மட்டுமே தற்காலிக மின் தடை ஏற்பட வாய்ப்புள்ளது. அதைத் தவிர 18 மணிநேர மின்விநியோக நடைமுறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மும்முனை மின்சாரத்தை 14 மணி நேரமாகக் குறைப்பது தொடர்பாக தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. இதுபோன்ற தகவல்கள் உண்மையல்ல என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீட் தேர்வு பற்றி பேசும் தகுதி திமுகவுக்கு இல்லை - நிர்மல்குமார்!



சென்னை, ஜூலை. 25–

மதுரையில் அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது; "நம்முடைய நிலைப்பாடு நீட் தேர்வு வேண்டாம் என்பது தான். நீட் தேர்வு தேவையற்றது. மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அதிக சுமையை தான் கொடுக்கும். எந்த வித பயனும் இல்லை என்பதை நாம் தெளிவாக சொல்லி இருக்கிறோம். அரசு சார்பாக தமிழகத்தில் நடக்கும் போராட்டங்களுக்கு, அறவழியில் நடக்கும் போராட்டங்களுக்கு முழு அளவில் பாதுகாப்பு கொடுத்து, அவர்களுக்கு தேவையான அனுமதியும் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

நீட் தேர்வு குறித்து திமுக முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் நிறைய பேசி இருக்கிறார்கள். இதை பேசக்கூடிய எந்த தகுதியும் திமுகவுக்கு கிடையாது. அவர்கள் தான் 5 வருடமாக இதனை மோசமான சூழ்நிலைக்கு கொண்டு போனார்கள். திமுக ஆட்சிக்கு வருவதற்கு முன் நீட் தேர்வை நிறுத்துவோம் என்று சொன்னார்கள். எப்படி நிறுத்துவார்கள். அது பார்லிமென்டில் மசோதா நிறைவேற்ற வேண்டும்.

சுப்ரீம்கோர்ட் உத்தரவு, எப்படி நிறுத்துவீர்கள். தவறான நம்பிக்கையை மக்களிடத்தில் கொடுத்து இரண்டு வருடம் ஓட்டினார்கள். இப்பொழுது வந்து மேடையில் பேசுகிறார்கள். பேசக்கூடிய திமுக முன்னாள் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் யாருக்கும் கிடையாது. நீட் தேர்வு வேண்டாம் என்பதில் நமது நிலைப்பாடு தெளிவாக இருக்கிறது, அதற்கான காலம் வரும் போது முதல் குரலாக கொடுப்போம்."

இவ்வாறு அமைச்சர் நிர்மல்குமார் கூறினார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020